<u>சுருக்கம்</u>

பள்ளிக்கல்வி –பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசிரியர் பணி வழங்குதல் – சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு மற்றும் பயிற்சி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வி(ஆ.தே.வா)துறை</u>

<u>அரசாணை (நிலை) எண். 260</u> நாள்: 17.12.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044,
விஜய வருடம் மார்கழி 2

படிக்கப்பட்டவை:–

1. திரு.பு.வேல்முருகன், பொதுச் செயலாளர், பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கம், சென்னை–17 என்பவரது மனு.

2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் சென்னை–6, கடித ந.க.எண்.8124/ஈ2/2013, நாள் 3.10.2013.

--------

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மனுவில், பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்க பொதுச் செயலாளர் பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்:–

(i). 550 பார்வையற்ற பட்டதாரி மாற்றுத் திறனாளிகளை தமிழ், ஆங்கிலம் மற்றும் வரலாறு பட்டதாரி ஆசிரியர்களாக கருணை அடிப்படையில் நியமனம் செய்யக் கோருதல்.

(ii). 200 பார்வையற்ற முதுகலைப் பட்டதாரி மாற்றுத் திறனாளிகளை தமிழ், ஆங்கிலம், வரலாறு, வணிகவியல், பொருளியல் மற்றும் அரசியல் அறிவியல் ஆகிய பாடங்களுக்கு முதுகலைப் பட்டதாரி ஆசிரியராக நியமனம் செய்யக் கோருதல்.

(iii). பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள 60 சதவீத மதிப்பெண்களிலிருந்து 40 சதவீத மதிப்பெண்களாக குறைக்க வேண்டுதல்.

(iv). பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இசை ஆசிரியர்களாக நியமிக்க கோருதல்

2. 30.09.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கை குறித்து அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, அதன் முடிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன:–

(1). B.Ed., படித்து பணியில்லாமல் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு எளிதில் பணி கிடைக்க ஏதுவாக, தனியாக ஒரு சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும். இத்தேர்வில்

தகுதி பெறும் B.Ed.,பட்டதாரிகள் தற்போதுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களிலும் (Backlog Vacancies) மற்றும் இனிமேல் ஏற்படக் கூடிய காலிப்பணியிடங்களிலும் பணியமர்த்தப்படுவர்.

(2). இந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் பார்வையற்றவர்களுக்கு, மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் வாயிலாக சிறப்புப் பயிற்சி வழங்க பள்ளிக் கல்வித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

(3). பார்வையற்றவர்களுக்கு தேர்வு எழுத உதவும் உதவியாளர்களுக்கு (Scribes) சிறப்புப் பயிற்சி வழங்கவும் பள்ளிக் கல்வித்துறை நடவடிக்கை எடுக்கும்.

(4). முதுகலைப் பட்டம் பெற்ற 200 பார்வையற்றவர்கள் தற்போதுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள் மற்றும் இனிமேல் ஏற்படக்கூடிய காலிப் பணியிடங்களில் அவர்தம் முதுகலை ஆசிரியர் போட்டித் தேர்வில் தெரிவு செய்யப்படின் பணியமர்த்தப்படுவர்.

(5). தேசிய தகுதித் தேர்வு (National Eligibility Test) மற்றும் மாநில அளவிலான தகுதித் தேர்வு (State Level Eligibility Test) தேர்ச்சி பெற்ற 100 முதுகலைப் பட்டம் பெற்ற பார்வையற்றவர்களை தற்போது கல்லூரிகளிலுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள் மற்றும் இனிமேல் வரும் காலிப் பணியிடங்களில் உதவிப் பேராசிரியர்களாக பணியமர்த்த ஆசிரியர் தேர்வு வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் பின்வருமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்:—

சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு 32 மாவட்டத் தலைநகரங்களில் ஒரு மையத்திற்கு 50 நபர்கள் வீதம் 50 மையங்களில் 40 நாட்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கலாம். ஒரு நாளைக்கு 6 மணி நேரப் பயிற்சி அளித்தால் தமிழ், ஆங்கிலம், கல்வி உளவியல் போன்ற பொதுப் பாடங்களிலும் கலைப் பிரிவில் சமூக அறிவியலிலும் பயிற்சி அளிப்பதற்கு ஏற்றவாறு 4 பயிற்சியாளர்களுக்கு செலவினம், பயிற்சிக்கு அளிக்கப்பட வேண்டிய பாடப்பொருட்கள் 40 நாள்களுக்கு பிரித்து அளிக்கப்பட வேண்டிய கால அட்டவணையை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வடிவமைத்து வழங்கும். தோராயமாக 2500 பேருக்கு பயிற்சி அளிப்பதற்கான திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. பயிற்சிக்கான தேநீர், உணவு மற்றும் சிற்றுண்டி, பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களுக்கும் சேர்த்துக் கணக்கிடப்பட்டுள்ளது. 40 நாட்கள், 2500 பேருக்கு நடத்தப்படும் இப்பயிற்சியில் ஒரு நபருக்கான செலவினம் ரூ.8,040/— ஆகும். தேர்விற்கு விண்ணப்பிப்பவர்களைப் பொறுத்து பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை அமையும். பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை கூடுதலாக / குறைவாக இருப்பின், அதற்கேற்ப மையங்களை மாற்றிக் கொள்ளலாம் எனத் தெரிவித்து, ஒரு மையத்திற்கு ரூ.4,02,000 வீதம் 50 மையங்களில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசிரியர் சிறப்பு தகுதித் தேர்விற்கான பயிற்சிகள் நடத்தத் தோராயமாக ஏற்படும் ரூ.2,01,00,000/— செலவினத்திற்கும், இப்பயிற்சியினை நடத்தவும் அரசின் அனுமதியினையும் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட நிலையில், மேலே பத்தி—3ல் உள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாற்றுத் திறனாளிகளை ஆசிரியர்களாக நியமனம்

செய்யவும், அவர்கள் தேர்வு எழுத சிறப்புப் பயிற்சி வழங்குவது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்தும் பொருட்டு பின்வரும் ஆணைகள் வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:–

(1). B.Ed., படித்து பணியில்லாமல் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு எளிதில் பணி கிடைக்க ஏதுவாக, தனியாக ஒரு சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தவும், இத்தேர்வில் தகுதி பெறும் B.Ed.,பட்டதாரிகள் தற்போதுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களிலும் (Backlog Vacancies) மற்றும் இனிமேல் ஏற்படக் கூடிய காலிப்பணியிடங்களிலும் பணியமர்த்தவும் அனுமதி வழங்கப்படுகிறது.

(2). சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் பார்வையற்றவர்களுக்கு 32 மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் வாயிலாக சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.

(3). பார்வையற்றவர்களுக்கு தேர்வு எழுத உதவும் உதவியாளர்களுக்கு (Scribes) சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.

(4). முதுகலைப் பட்டம் பெற்ற 200 பார்வையற்றவர்களுக்கு அரசு விதிகளுக்குட்பட்டு, தற்போதுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள் மற்றும் இனிமேல் ஏற்படக்கூடிய காலிப் பணியிடங்களில் அவர்தம் முதுகலை ஆசிரியர் போட்டித் தேர்வில் தெரிவு செய்யப்படின் அவர்கள் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களாக பணியமர்த்தப்படுவர்.

(5). தேசிய தகுதித் தேர்வு (National Eligibility Test) மற்றும் மாநில அளவிலான தகுதித் தேர்வு (State Level Eligibility Test) தேர்ச்சி பெற்ற 100 முதுகலைப் பட்டம் பெற்ற பார்வையற்றவர்களை அரசு விதிகளுக்குட்பட்டு தற்போது கல்லூரிகளிலுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள் மற்றும் இனிமேல் வரும் காலிப் பணியிடங்களில் உதவிப் பேராசிரியர்களாக பணியமர்த்த ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

(6). சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்விற்கு விண்ணப்பிக்கும் பார்வையற்றவர்களுக்கும் அவர்களின் உதவியாளர்களுக்கும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூலம் 32 மாவட்டங்களில் 50 மையங்களில் பயிற்சி அளிக்க மையம் ஒன்றுக்கு ரூ.4,02,000/– வீதம் மொத்தம் ரூ.2,01,00,000/–க்கு (ரூபாய் இரண்டு கோடியே ஒரு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி–4 (6)ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2202 பொதுக்கல்வி –02 இடைநிலைக் கல்வி – 004 ஆராய்ச்சியும் பயிற்சியும்–I திட்டத்தில் சேராதது – AA ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி –72 பயிற்சி

(து.தொ.கு 2202 02 004 AA 7201)

6. மேலே பத்தி–4(6)ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் ''புதுப்பணித்திட்டமாக''கருதப்படும். துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்தினை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் செலவிடப்படும். அதற்குரிய ஆணைகள்

நிதித் ((வரவு செலவு (பொது–1)) துறையில் பிறப்பிக்கப்படும். உடனடி செலவுக்கான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதி (வரவு செலவு (பொது–1)துறைக்குத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறும், மேலும், இச்செலவினத்தினை 2013–2014ஆம் ஆண்டு துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய காலத்தில் தவறாது நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநரால் அளிக்கப்படும் பட்டியினை அனுமதிக்குமாறு சென்னை–35, சம்பளக் கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணைநிதித்துறையின் அ.சா.கு.எண்.71532/செயலாளர்(செலவினங்கள்) /கல்வி–II/13, நாள் 17.12.2013இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2374 (இரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்தினான்கு)

(ஆளுநர் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
இயக்குநர்,
மாநிலக் கலவியியல் ஆராய்ச்சி (ம)
பயிற்சி நிறுவன இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
ஆணையர்,
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், கே.கே.நகர்,
சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை,சென்னை–9.
உயர் கல்வித்துறை, சென்னை–9.
நிதி (கல்வி II/ வ.செ.பொது–I) /(வ.செ.(பொது–II)துறை,
சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு–செலவு) துறை, சென்னை–9.
மண்டல தணிக்கை அலுவலர், சென்னை–9.
SC/SF

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்